விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 வைகாசி 20 ஷ்பா 10 இதழ் 110
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 3—6—82

தொழிற்சாலையில்
கூடிய செய்முறைப் பயிற்சியுடன்
அறிமுறைப் பயிற்சியும் உட்பட
வெல்டிங் பயிற்சி வகுப்பு
ஆரம்பம்:
5-6-82 சனிக்கிழமை
தொடர்பு:
சீ. ஈ. ரி.
ஐலன்ட் இன்ஸ்ரிரியூட்,
(நாகவிகாரைக்கு முன்பாக)
58, ஸ்ரான்லி வீதி – யாழ்ப்பாணம்
3418

## ஜனாதிபதி பதவியில் நீடிக்கும் எண்ணம் இல்லை

புதுடில்லி, ஜூன் 2

"இந்திய ஜனாதிபதி பதவியில் மேலும் நீடிக்கும் எண்ணம் எனக்கு இல்லை இந்தியாவின் வளர்ச்சிக்காக நான் தொடர்ந்து உழைத்துவருவேன்"

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி நிருபர்களிடம் தெரிவித்துள்ளார். [வெ]

### "தமிழ் இளைஞர்களை இலங்கையிடம் ஒப்படைக்க வேண்டாம்"

# ம. அரசிடமும், இந்திராவிடமும்

# எம்ஜி ஆரின் அதிமுக கோரிக்கை

## இலங்கையில் இளைஞர்களின் நடவடிக்கை: தமிழக அரசுக்கு அக்கறை இல்லையாம்

(சென்னை)

தமிழகத்தில் கைதான தமிழ்ஈழ விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்களை இலங்கை அரசிடம் கையளிக்கவேண்டாம் என்று தமிழக ஆளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசிடமும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக முதலமைச்சரும், அ. தி. மு. க. தலைவருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மேற்கண்ட தகவலைச் சென்னையில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

இதுதொடர்பான தீர்மானம் ஒன்றை நேற்று சென்னையில் திரு. எம். ஜி. ஆர் தலைமையில் கூடிய அ. தி. மு. க. செயற்குழு ஏகமனதாக நிறைவேற்றியது.

### இந்திராவுக்கு தீர்மானத்தின் பிரதி

இத்தீர்மானத்தின் பிரதி ஒன்று திருமதி இந்திரா காந்திக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. இராமச்சந்திரன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

திரு. இராமச்சந்திரன் நிருபர்களிடம் மேலும் கூறியதாவது;–

### இலங்கையில் என்னசெய்தார்கள் என்பதில் எமக்கு அக்கறையில்லை

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியது மாநில அரசின் கடமை. சட்டத்தை மீறுவோர்மீது நாம் நடவடிக்கை எடுப்போம். இலங்கை இளைஞர்கள் என்ன செய்தார்கள் என்பதில் தமிழக அரசுக்கு அக்கறை இல்லை. அவர்கள் சென்னையில் அமைதிக்குப் பங்கம் விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே விசாரிக்கப்படுகிறார்கள்.

கைதான இளைஞர்களை இலங்கைப் பொலிசார் துரோகிகள் என்று கூறுகிறார்களே? என நிருபர் ஒருவர் கேட்டதற்கு திரு. இராமச்சந்திரன் பின்வருமாறு கூறினார்.

### காந்தியையும் சுபாஷையும் துரோகி என்றே கூறினர்

எமது தேசபிதாவான மகாத்மா காந்தியையும் விடுதலைவீரர் சுபாஷ் சந்திரபோஸையும் அன்று ஒரு கூட்டத்தினர் 'துரோகிகள்' என்றே கூறினார்கள். நாமும் இப்போது அவர்களைத் துரோகிகள் என்று நடத்துகிறோம். (ம-இ)

## இளைஞர் காங். தலைவர் தங்கபாலு சர்வகட்சி மகாநாட்டில் பங்குபற்றியமைக்கு எதிர்ப்பு

(சென்னை)

தமிழகத்தில் கைதுசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த ஐந்து தீவிரவாத இளைஞர்கள் விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் சென்னையில்கூட்டப்பட்டசர்வகட்சி மாநாட்டில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவிலான தமிழ்நாடு இளைஞர்

(8 ம் பக்கம் பார்க்க)

## இனத்துவேஷம் தூண்டினால் கடுமையான நடவடிக்கை

### இரகசியத்தகவல் குறித்தும் அமைச்சரவை ஆலோசனை

[கொழும்பு]

நாட்டில் இனத்துவேஷத்தைக் கிளப்பி இனக்கலவரங்களை ஏற்படுத்த முனைபவர்களுக்கெதிராக குற்றவியல் சட்டக் கோவையின்கீழ் கடும் நடவடிக்கை எடுப்பதென்று நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அவசியம் ஏற்படும் பட்சத்தில் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தைப் பிறப்பிப்பதென்றும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இனக்கலவரங்களையும், இனத்துவேஷத்தையும் ஏற்படுத்தக்கூடிய துண்டுப் பிரசுரங்கள் நாட்டில்விநியோகம் செய்யப்பட்டு வருவதாக அரசாங்கத்திற்கு தெரியவந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

அமைச்சரவையின் இம்முடிவுகளை அமைச்சரவைப் பேச்சாளரான திரு ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் நேற்று பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். (ம-வெ)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் துந்துபி வருஷம் வைகாசித் திங்கள் 20-ம் நாள் (3 – 6 – 82) இன்று வியாழக்கிழமை முன் இரவு 9–2 மணிமுதல் 11–10 மணி வரையுள்ள மகரலக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>விஜயகுமார்<br>Chief Officer (F. G.)<br>Merchant Navy<br>அவர்களுக்கும் | எமது புதல்வி<br>திருநிறை செல்வி<br>புஷ்பராணி<br>அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் தங்கள் இஷ்ட மித்திர குடும்ப சமேதரமாய் நல்வரவு தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

| | |
|---|---|
| மணமகனின் பெற்றோர் | மணமகளின் பெற்றோர் |
| க. பஞ்சலிங்கம்<br>தம்பதிகள் | வ. இரத்தினவேல்<br>Retired Chief Revenue<br>Inspector (C.M.C)<br>தம்பதிகள் |
| "சாந்தவாசா",<br>கிழக்கு தெரு,<br>வல்வெட்டித்துறை | 28, உலகுடையார் ஒழுங்கை,<br>வல்வெட்டித்துறை. |

3431

## ஏலவிற்பனை

### யாழ். மாநகரசபை

யாழ், மாநகர சபையின் பொதுக் களஞ்சியத்தில் இருக்கும் மண்வெட்டி, அலவாங்கு, பித்தளைக்குடம், கட்டில், கதிரை, சிமெந்து உறைகள் போன்ற பழைய பொருட்கள் 11–6–82 வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். காரியாலய நேரங்களிற் பொருட்களைப் பார்வையிடலாம் சித்திபெற்ற கேள்விக்காரர் உரிய பணத்தை உடனே செலுத்திப் பொருட்களை அகற்றிவிட வேண்டும்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

1–6–82 3425

## அரிய சந்தர்ப்பம்

றேடியோ — டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங், Hotel Management பயிற்சி வகுப்புக்கள் சிறந்த செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பம்: 7—6—82. அனைவரும் சேரலாம். நேரில் வரவும்.

## நாஷனல் அக்கடமி

(மொம்சாக் கட்டிடம்,
விவேகானந்த அச்சகம் முன்பாக)
11, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.

3432

# ★ கேரதீவிலிருந்து வரும் 809 இல. பஸ்
# காலையில் நேரம் பிந்துவதால் ஏராளமான பயணிகள் கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

கேரதீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு காலை 8-15 க்கு வர வேண்டிய 809 இலக்க பஸ் சுமார் 9-00 மணிக்கு வருவதால் பாடசாலை மாணவர்கள், அரசாங்க தனியார் ஊழியர்கள், வர்த்தகர்கள் மிகவும் பாதிப்படைந்து வருவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

பிரயாணச்செலவு அதிகரித்துள்ளதால் பருவகாலச் சீட்டின் மூலம் வ. பி. போ. சபையைச் சேர்ந்த பஸ்ஸையே இப்பிரயாணிகள் நம்பி போக்குவரத்துச் செய்ய வேண்டியுள்ளது.

9 மாத காலமாக இந்த அவலநிலை தங்களுக்கு ஏற்பட்டிருந்ததாகவும் இது பற்றித்து சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு முறையிட்டதன் பேரில் கடந்த 3 மாதகாலமாக சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 7-45 க்கு வந்து சேரக்கூடியதாக ஒரு குறுகிய பஸ்சேவை நடாத்தப்பட்டதாகவும், அதுவும் இப்பொழுது ஒழுங்காக சேவை யீடுபடுவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறுகிய சேவைக்கான பஸ் விடப்படுவதற்கு முன்னர் பிரயாணிகள் நெருக்கடி காரணமாக 809 இலக்க பஸ்ஸிலிருந்து கடமையாற்றிக்கொண்டிருந்த நடாத்துநர் ஒருவரும் பிரயாணி ஒருவரும் தவறிவிழுந்து படுகாயமடைந்தது தெரிந்ததே.

நேற்று முன்தினம் காலை கேரதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த பஸ்ஸில் ஏற்பட்ட பிரயாணிகள் நெருக்கடி காரணமாக மறவன்புலோவிலிருந்து நாவற்குழி வரை ஒருபிரயாணியைக் கூட ஏற்றி வரமுடியாத நிலையில் இருந்ததாம் இதனல் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனராம்.

பிரயாணிகளின் போக்குவரத்துக் கஷ்டத்தைபோக்க திரும்பவும் சாவச்சேரியிலிருந்து கேரதீவுப்பாதை வழியான குறுகிய பஸ்சேவையை ஒழுங்காக நடாத்துமாறு இப்பகுதி பிரயாணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (மா)

# ஸ்ரீ விளம்பரம்

## விற்பனைக்கு

4-6-82 ல் வன்னிவிளாங்குளம் முத்துமாரியம்மன் பொங்கல் திருவிழாவிலும் 7-6-82 ல் வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் திருவிழாவிலும் மில்க்வைற் தயாரிப்புகள்யாவும் சகாய விற்பனையுடன், அன்பளிப்புகளும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் மில்க்வைற் விளம்பரவாகனத்தில் கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற் யாழ்ப்பாணம். 3302

வன்னிவிளான்குளம் வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில் அண்ணு கோப்பி, அண்ணு பத்தி, அண்ணுபற்பொடி சோயாரின் மற்றும் எமது உற்பத்தி பொருட்களை வாங்கி இனும் பொருட்களையும் பரிசுக் கூப்பன்களையும் பெற்றுக்கொள்ளுங்கள். அண்ணு தொழில் சாலை, இணுவில். 3419

சித்தங்கேணி பண்டத்தரிப்பு பிரதான வீதியில் இருக்கும் ஐந்து அறை வீடு 6 பரப்பு காணியுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். 4/1 மாதங்காவத்த ஒழுங்கை வெள்ளவத்தை. 3428

## தேவை

ஈழத்துத் திருச்செந்தூர் என அழைக்கப்படும் எழுவைதீவு அருள்மிகு ஸ்ரீமுருகன் தேவஸ்த்தானத்திற்குப் பூசகர் தேவை. ஆச்சாரியாபிஷேகம் பெற்றவர்கள் விரும்பத்தக்கது குடும்பமாக உள்ளவர்களுக்குத் தங்குமிட வசதியுண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பிரம்மஸ்ரீ பத்மநாதசர்மா அவர்கள் ஐயனர் கோவில் வீதி, கொக்குவில் மேற்கு கொக்குவில். 3427

## இலவச குடிநீர்

(மண்டைதீவு)

வேலணை உதவிஅரசாங்கஅதிபர்பிரிவிலுள்ள வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு சரவணை ஆகிய இடங்களுக்கு வரட்சி நிவாரண சேவையாக சமூக சேவைப் பகுதியினர் இலவசமாக குடிநீர் வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றனர்.

இலவச குடிநீர் வழங்குவதற்குவாகன சொந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்த முறையில் கேள்விப்பத்திரம் வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ளது.




## சென்னை - திருச்சி போயிங் விமானசேவை

சென்னை ஜூன் 2

சென்னைக்கும் திருச்சிக்குமிடையில் போயிங் விமான சேவை ஒன்று அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. [க]

## தூத்துக்குடியில் விமானத் தளம்

சென்னை, ஜூன். 2

தூத்துக்குடியில் விரைவில் விமானத்தளமொன்று அமைக்கப்படவுள்ளதாக மத்திய சுற்றுலா, விமானத்துறையமைச்சர் திரு. ஏ. ரி. ஷர்மா தெரிவித்துள்ளார். திருச்சி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படுமென்றும் அவர்கூறினர். [வெ]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கோப்பாய்தெற்கில் வசித்த காலஞ்சென்ற நில அளவையாளர் நமசிவாயம் தம்பு என்பவரின் மரணசாதனமில்லாத சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் நமசிவாயம் தம்பு கைம்பெண் தங்கம் கோப்பாய் தெற்கு

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல: 3614

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படிநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும்1982-ஆம் ஆண்டு வைகாசி மாதம் 21-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்.

மறு தவணை 4-6-82

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

1982ம் ஆண்டு சித்திரை மாதம் 5-ம் திகதி.

தயாரித்தவர்:

வ.முத்துக்குமாரசுவாமி
மனுதாரின் சட்டத்தரணி,

3426

## அறிவித்தல்

### மின் தடை

இலங்கை மின்சார சபையினரால் சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால் 06-06-1982ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியிலிருந்து நண்பகல் 1-00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பதை முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சீ. வி. கே. சிவஞானம்
ஆணையாளர்,
யாழ் மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31-05 1982. 3424

## இன்று நடக்கும் பயிற்சி வகுப்பு

(மாவிட்டபுரம்)

வலி. வடக்கு கிராமோதய சபைத்தலைவர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

கிராமோதய சபைகள் அமைக்கப்பட்டு இன்னமும் அவை சரியான முறையில் இயங்க ஆரம்டுக்கவில்லை அவற்றுக்கான திட்டங்கள் எதுவும் இன்னமும் தெரிவிக்கப்படவில்லை எனக்கூறப்படுகிறது இந்நிலையில்வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம் பெறும் மேற்படி பயிற்சிவகுப்பு கிராமோதய சபைகளது செயல்பாட்டுக்கு வழிவகுக்கலாம் என்று எதிர்பார்கப்படுகினது.

## தேங்காய் விற்பனை

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கண்டி வீதி பளை 173-ம் மைல் கல்லுக்கு அருகாமையில் உள்ள தர்மக்கேணி-சரந்தாய் தோட்டத்தில் சுமார் 15,000 தேங்காய்கள் உடன் விற்பனைக்குண்டு. மேற்படி தேங்காய்களை தோட்ட அத்தியட்சகரின் அனுமதியுடன் எல்லா வேலைநாட்களிலும் பார்வையிடலாம். தங்கள் கேள்வி விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு 1000 தேங்காய்கள் கழிவில்லாமல் என்ன விலை என்பதைத் தெரியப்படுத்தி உடன் அனுப்பிவைக்கவும் கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்பட்சத்தில் தேங்காய்க்கான முழுப்பணத்தையும் மேற்படி தேங்காய்களை அப்புறப்படுத்துமுன் செலுத்தப்படல்வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10-6-82.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

முகாமையாளர்
பிராந்திய அலுவலகம்,
ம. பெ. அ. சபை,
165, புத்தளம் றோட், சிலாபம்

3422

AUTO COOL HELPS JAFFNA

**To Build up in Computer Technology**

We have the pleasure in announcing that the following work will be undertaken from 1st June 1982.

1. COMPUTER CONSULTING
2. DATA PROCESSING
3. WORD PROCESSING and SIMILAR other JOBS.

NEW COMPUTER CLASSES COMMENCE: June 1982.

Instructor: N. S. RAJAH B. Sc. Hons (U. K.)
(Former Computer Consultant of Messrs. B. C. Ltd., U. K.)

Practical will be given in at least two different type Computers.
(Micro and Terminal base Computer.)

Language: Basic and Fortan.

For further details:

**AUTO COOL ENGINEERS**

KANDAPPASEGARAM ROAD,
(Opposite Santi Cinema)
JAFFNA.

## சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுள்ளது)

சுன்னுகம்

## தற்காலிக பாண் சுடுநர் பதவி

மேற்குறித்த பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித் தகைமை:**

குறைந்தது எட்டாம் வகுப்புச் சித்தி.

**அனுபவம்!**

பாண், றஸ்க், பிஸ்கற் போன்ற பொருட்கள் தயாரிப்பதில் குறைந்தது 5 வருட அனுபவம்.

**வயது:**

23 - 40க்கு இடைப்பட்டவராய் இருத்தல்வேண்டும்.

**வேதனம்:**

அரசாங்கப் படிகள் உட்பட தொழில் வர்த்தமானியின் பிரகாரம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:**

15 - 6 - 82.

சங்கத் தொழிற் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை ரூபா 2/- செலுத்தி, சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று 15-06-82ம் திகதிக்கு முன்பதாக பொது முகாமையாளர், சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம், சுன்னுகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

பொது முகாமையாளர்

சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம்,
சுன்னுகம்.
31-05-82. 3416

போக்லண்ட் விவகாரம்:

# தலைநகருக்கு மிகவும் சமீப தூரத்தில் பிரிட்டிஷ் படைகள்!

## பலத்த சமருக்குபின் மவுண்ட்கென்ற் வீழ்ச்சி

லண்டன் ஜூன் 2

போக்லண்ட் தீவுகளில் பிரிட்டிஷ் படைகள் கடும் சமருக்குப்பின்னர் மவுண்ட்கென்ற் என்ற மலைப் பிரதேசத்தை கைப்பற்றி தொடர்ந்து தலைநகரை நோக்கி முன்னேறி வருகின்றன.

இந்த மலைப்பிரதேசம்போக்லண்ட் தலைநகரான போட்ஸ்ரான்லியிருந்து 10 மைல் தூரத்தில் உள்ளது. பிரிட்டிஷ் துருப்புக்களுக்கு தொடர்ந்து வெற்றிகிடைத்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குன்று பிரதேசத்தில் தற்பொழுது பிரிட்டிஷ்படைகள் நிலைகளை அமைத்துக்கொண்டு தொடர்ந்து முன்னேறி வருகின்றனர்.

தலைநகரான போர்ட் ஸ்ரான்லி கைப்பற்றப்பட்ட பின்னரும் ஆர்ஜென்டீனா படைகள் தொடர்ந்து போராடுவார்கள் என பிரபல பத்திரிகை நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார். போக்லண்ட் தீவுகளை ஆர்ஜென்டீனா கைப்பற்றப்போவதாக முதன் முதலில் அறிவித்தவர் இந்தப் பிரபல பத்திரிகை நிருபராகும்.

பிரிட்டிஷ் படைகள் மீது ஆர்ஜென்டீனா விமான தாக்குதல்களை நடத்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அணிசேரா மாநாட்டில் ஆர்ஜென்டீனா அமைச்சர்

புவனர்ஸ் அயர்ஸ் ஜூன் 2

ஆர்ஜென்டீனா வெளிநாட்டமைச்சர் திரு. ஹொஸ்ரா மெண்டிஷ் ஹவானாவில் நடைபெறும் அணிசேரா இயக்க நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் போக்லண்ட்தீவுகள் பிரச்னை தொடர்பாகஆர்ஜென்டீனாவுக்கு அணிசேரா நாடுகளின் முழு ஒத்துழைப்பையும் கோருவாரென்று கூறப்பட்டது.

போக்லண்ட் தீவுகள் யுத்ததில் பிரிட்டனுக்கு அமெரிக்கா அளித்துவரும் உதவியை நிறுத்தவேண்டுமென்று அணிசேரா நாடுகள் கோரவேண்டுமென்று கியூபா இம்மாநாட்டில் தீர்மானமொன்றைக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(வெ)

## அரசுகள் மட்டத்தில் ஆலோசனை?

கொழும்பு]

இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் திரு. தோமஸ் ஏபிரகாம் நேற்று முன்தினம் இந்தியா பயணமானார்.

சென்னையில் கைதான தமிழ் தீவிரவாத இளைஞர்கள் தொடர்பாக இந்திய அரசுடன் அவர் ஆலோசனை மேற்கொள்வார் எனத் தெரியவருகிறது.

இதற்கிடையே தமிழ்நாட்டில் கைதான தீவிரவாத இளைஞர்கள் சம்பந்தமாக இலங்கை - இந்திய வெளிவிவகார அமைச்சுக்கள் மட்டத்தில் ஆலோசனை நடைபெறுவதாகத் தெரியவருகிறது.

### ஐ. ஜீ. பி. அறிக்கை

அண்மையில் இந்தியா சென்று கடந்த திங்கட்கிழமை தாயகம் திரும்பிய இலங்கை பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் நேற்று ஜனாதிபதியிடம் தமது அறிக்கையை கையளித்தார்.

மீசாலை கொள்ளை வழக்கு;

## விடிய முன் கடையை விட்டு வெளியேறுமாறு அடித்தார்கள்

### கடை உரிமையாளர் சாட்சியம்

[சாவகச்சேரி]

சந்தேகநபர்கள் கடைக்கு வந்து சிகறெட் தரும்படி கேட்டார்கள், சிகறெட் இல்லை என்று விடை கொடுத்தேன். அதேசமயம் எப்போ கடையை விட்டு வெளியேறுவீர் என்று கேட்டார்கள், நான் இப்போதைக்கு வெளியேற முடியாதென்றேன். விடிய முன் கடையைவிட்டு வெளியேறிவிட வேண்டுமென 2ம், 3ம் எதிரிகள் அடித்தார்கள்.

மீசாலை மண்கொள்ளை வழக்கில் சாட்சியமளிக்கையில் கடை உரிமையாளர் சின்னத்தம்பி கனகரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி திரு. எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ் வழக்கில் 82 மே. 8ம் திகதி இரவு மீசாலையைச் சேர்ந்த வீரவாகு வடிவேல், நாகமுத்து மனோகரன், அல்லது செல்லக்கண்டு (சாவகச்சேரி) வேலுப்பிள்ளை இராசேஸ்வரன் (கெருடாவில்) என்பவர்கள் அவ்வூரைச் சேர்ந்த கனகரத்தினம் என்பவரிடமிருந்து ரூபா 2533ஐயும் அவரது 775 ரூபா பெறுமதியான சைக்கிலையும் அடித்துப் பறித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

1ம், 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். நபசிவாயா, சட்டத்தரணி எஸ். சுரேந்திரனின் அனுசரணையுடன் ஆஜரானார். 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி வ செல்லத்தம்பி, சட்டத்தரணி எஸ். சுரேந்திரனின் அனுசரணையுடன் ஆஜரானார், வழக்காளி தரப்பில், சட்டத்தரணி சீ. பாலகிஷ்ணன், பொலிஸ் சார்ஜன் வி. செல்லையாவின் உதவியுடன் ஆஜரானார்.

கனகரத்தினம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

முதலடி விழுந்ததும் கடையைப் பூட்டிவிட்டு எனது சீட்டுக் காசாகிய ரூபா 2533 ஐ எடுத்துக்கொண்டு எனது சைக்கிளை உருட்டிப் புறப்படும் போது 1 யார் தூரத்தில் வடிவேலுவும் நாகேஸ்வரனும் பின்புறமாக வந்து அடித்துச் சைக்கிலைப் பறித்தார்கள், நான் ஏகயைவிட்டேன். வடிவேலு கையிலிருந்த காசைப் பறித்தார். நாகேஸ்வரன் சைக்கிலைப் பறித்தார். நான் கொண்டுவந்த காசு சீட்டுக் கட்டியதின்பேரில் கிளியக்காவினால் தரப்பட்டது.

அன்றிரவு 9 மணிவரை சாவகச்சேரிப் பொலிசுக்குச் சென்றேன், மறுநாள் 7மணிக்கும் பொலிஸ்நிலையத்திலிருந் பொலிசாருடன் ஜீப் வண்டியிற் சம்பவ இடத்திற்குச் சென்றபோது 1ம் எதிரி கத்தியுடன் கடையடியில் நின்றார். அவரிடமிருந்த கத்தியையும் பறித்து அவரைக் கைது செய்தனர். அப்பொழுது சைக்கில் எங்கே? எனக் கேட்டனர் கடையின் பின்னுக்குச் சைக்கில் கிடக்கு என்றார். விஜயன் என்பவர் சைக்கிளைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவந்தார். என்றார்.

சிவகுரு, சிவபாலன் என்பவரும் சாட்சியமளித்தபின் நீதிபதி ஜூலை மாதம் 19ம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். [க]

## வளர்முக நாடுகளின் பொருளாதாரம் பாதிப்பு

ஹெல்சிங், ஜூன். 2

ஹெல்சிங்கியில் நடைபெற்ற சர்வதேச நாணயநிதியினதும், புனருத்தாரணம் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினதும் கமிட்டிகளின் கூட்டம் அமெரிக்காமற்றும் பொதுச் சந்தை நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நிதி, பொருளாதார முரண்பாடுகள் அதிகரித்திருப்பதைக் காட்டியுள்ளன.

வங்கி வீதங்களை அமெரிக்கா அதிகரித்திருப்பதன் காரணமாக அமெரிக்காவின் மூலதனம் அதிகரித்திருக்கிறது. இதன் எதிரொலி, பிரான்ஸ், பிரிட்டன், மேற்கு ஜெர்மனி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நெருக்கடிகளைச் சிக்கலாக்கியுள்ளது. அதே வேளையில் ஜப்பான், சர்வதேச சந்தையில் தனதுபொருளாதார விஸ்தரிப்பினால் அமெரிக்காவும் பொதுச்சந்தை நாடுகளும் பெரும்பாதிப்படைந்துள்ளன. அத்துடன் ஜப்பான் தனது இறக்குமதிகளையும் நிறுத்திவிட்டுள்ளது.

இந்த முரண்பாடுகள் அமெரிக்காவினதும் இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் அதிகார செல்வாக்கின்கீழ் வளர்முக நாடுகளின் பொருளாதாரத்தை பெரிதும் பாதித்துள்ளன.

## அமெரிக்காவில் யூத செல்வாக்கு

பெய்ரூட், ஜூன். 2

அமெரிக்க கோடீஸ்வரர்களில் 20 சத விகிதமானோர் யூதர்கள். வெகுஜன தகவல் சாதனம், முதவீடு வங்கி, உணவுத் தொழிற்துறை, வர்த்தகம், விமான உர்பத்தி முதலிய துறைகளில் யூத செல்வாக்கு கணிசமானதாகும்,

யூதர்கள்; ஜனநாயக, குடியரசுக் கட்சிகளிலும் பெரும் செல்வாக் பெற்றுள்ளனர். 1970ம் ஆண்டு குடியசுக்கட்சியின் தேர்தல் நிதிக்குகிடைத்த பணத்தில் 20-40 சத விகிதம் யூத பெரும் முதலாளிகளின் கஜானாவிலிருந்து வந்து, அதேபோல ஜனநாயக கட்சியின் நிதியில் சரி பாரதி யூதர் வட்டாரங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது.

அமெரிக்க ஆளும்வட்டாரங்கள் மீது செல்வாக்கும் பலவந்தமும் பிரயோகிக்கும் யுனைட்டட் ஜுனிஷ் அட்பீல் போன்ற ஸயோனிஸ ஸ்தாபனங்களுக்கு யூத பெரும் முதலாளிகள் 45–60 கோடி டாலர்களை பிரதி வருடமும் வழங்குகிறதாம்.

## குழு நியமிக்கப்படும்

சென்னை, ஜூன். 2

சென்னை நகரில் 40 லட்சம் மக்களின் குடிநீர்ப்பிரச்னைக்கு தீர்வுகான உடனடியாக நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றைநியமிக்குமாறுசென்னை உயர் நீதிமன்றம் தமிழ் நாடு அரசுக்கு உத்தர விட்டுள்ளது.

நீண்டகாலம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாத மனு ஒன்றின் மீது நீதியரசர் எஸ். பத்மநாதன் மேற்கண்ட தீர்ப்பை வழங்கினார்.

கோயம்புத்தூரின் அசுத்த நீரைத் தடுப்பதற்கும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. (க)

திருமலை எண்ணைக்குதம்:

## சோவியத்யூனியன் கேள்விப் பத்திரம் தாக்கல் செய்தது!

### அமெரிக்காவும் விண்ணப்பித்தது

(கொழும்பு)

திருகோணமலை எண்ணை குதத்தை குத்தகைக்கு எடுப்பதற்கு சோவியத் ரஷ்யா கேள்விப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது. மற்றும் 6 நாடுகளும் கேளவிப்பத்திரம் தாக்கல் செய்துள்ளன.

சீனன் குடாவில் அமைக்கப்பட்டுள்ள எண்ணைக்குதத்திற்கு சர்வதேசரீதியில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருந்தது.

ரஷ்யா தூதுக்குழு 99 எண்ணைக் குதங்களையும் நுணுக்கமாக பார்வையிட்டு பரிசீலனை செய்ததாக கூறப்படுகிறது.

அமெரிக்கா பிரிட்டன், மேற்கு ஜேர்மனி, இந்தியா, சுவிற்சலந்து ஆகியநாடுகளும் கேள்விப்பத்திரம் தாக்கல் செய்துள்ளன. (க)

## இலவச கண் சோதனை

(புலோலி)

பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தின் இலவச கண்பார்வைப் பரிசோதனை முகாம்இம்மாதம் 6ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது,

### மணிவாக்கு

நான்கு விடயங்களில் வயது நன்கு மதிக்கப்படுகின்றது: பழையமரம் மிகவும் நன்ருக எரிக்க உதவும்; பழைய மது பருகச்சுவைக்கும்; பழைய நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்; பழைய நூலாசிரியர்களின் நூல்கள் படிக்க வேண்டுவன.

— பிரான்சிஸ் பேக்கன்

## நமது நோக்கு

## இளைஞர் உலகம்

''நாட்டில் ஒரு பதட்ட நிலை மீண்டும் உருவாகலாம்! திறமையான பயிற்சி பெற்ற புலனாய்வுக்குழு, பொலிஸ் படையில் பொறுப்புள்ள இடம் வகிக்கிறதா?'' என்ற கேள்வியை இன்றைய அமைச்சர் அவைச் செயலாளரும் முன்னைநாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான திரு. ஜீ. வி. பி. சமரசிங்கா எழுப்பியிருக்கிருர்.

அதேசமயம் இன்றைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் திரு. ரீ. பீ. வேரப்பிட்டியா நாட்டின் ஜனநாயக ஆட்சிக்கு அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் சில அரசியல் கட்சிகள் ரகசியமாக குழப்பத்தை ஏற்படுத்தி, நிலைத்துவரும் மக்கள் ஆட்சிக்கு முடிவு கட்டும் பணியில் ஈடுபடுகிருர்களென்றும் பொலிஸாருக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிருர்.

இவ்விரு கூற்றுகளும் ஆதரமில்லாத அபாயக்குரல் என்று நாம் தட்டிக் கழிக்கவில்லை.

வடபகுதியில் நடைபெற்ற பயங்கரவாதம் கண்டு அஞ்சிய அரசு ராணுவ உதவியைப் பொலிஸாருக்கு வழங்கியதும், ஆறுமாதத்தில் அலுவலை முடித்து வைக்க வேண்டுமென்று ஜனுதிபதி பணிப்புரை வழங்கியதும் நாடறிந்த விடயம்.

இற்றைக்கு இரண்டு வருட காலம் இவ்விடயம் எந்த நிலையிலிருக்கிறதென்பது அரசாங்கத்துக்கு ஏமாற்றமளிக்க வல்லது.

அது அவ்வாருக தென்னிலங்கையில், இளைஞர்களை, குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களை குழப்பத்தில் ஈடுபடுத்த அரசியல் லாபம் தேடும் கட்சிகள் முயல்கின்றன என்றும், பல்கலைக்கழக உபவேந்தர்கள் விழிப்புடன் நிலைமையை அவதானித்து ஆவன செய்ய வேண்டுமென்றும் பல்கலைக்கழக மான்யக்குழு தலைவர் டாக்டர் கல்பகே பணித்திருக்கிருர்.

இம் மும்மூர்த்திகளும்– திரு. ஜீ. வீ. பி. சமரசிங்க, திரு. ரீ. பீ. வேரப்பிட்டிய, டாக்டர் கல்பகே – குழப்பத்தை எவ்வாறு அடக்கலாம் என்பதையும், இவ்வித குழப்பம் அரசியல் மோதல்களாலேதான் ஏற்படுகின்றதென்றும் கருதுகின்றனர்.

1971ல் இடம்பெற்ற பயங்கரவாதமும், இன்று அரசைக் கலக்கும் வடபகுதிப் பயங்கரவாதமும் இம்மூவர் மனத்தில் குடிகொண்டிருப்பதிலிருந்து நாம் இவ்வாறு யூகிக்கின்ருேம்.

அரசியலுக்கும் மாணவர் குழப்பத்துக்கும் தொடர்பில்லையென்று யாரும் சொல்லத் துணியார்; இருந்தும் பல்கலைக்கழகத்தில் உருவாகும் குழப்பங்களுக்கு அரசியல்வாதிகளே ''கால்'' என்று கொள்வது, மாணவர்கள் – வளர்ந்த வாக்காளர்கள் – பாடங் கேட்கும் 'நல்ல பிள்ளைகள்' அரசியல் வாதிகளால் வம்புக்கிழுக்கப்படுகின்றனர் என்ற கருத்து இந்த அபாய, எச்சரிக்கைக் குரலில் தொனிக்கிறது.

அழுக்கு நிறைந்த குப்பியில் தீயிட்டால் அது சுவாலித்தெரியும். அதுவும் காற்று சார்பாக இருந்தால் அதனை அணைப்பது அசாத்தியம்; இவ்விரண்டுமில்லாமலே, குப்பைதானே எரியுமென்பது ரசாயனம் படித்தவர்களுக்கு மட்டுமல்ல சாதாரண மக்களுக்கும் புரியும். ரசாயனம் அதனை 'மீதேன்' என்ருல் பாமர மக்கள் 'கொள்ளிவாற்பே' என்பார்கள். அவ்வளவுதான் வேறுபாடு.

எனவே இளைஞர்கள் கொந்தளிப்படைவதற்கு மூலகாரணங்கள் வேறு: அக்காரணங்கள் தாமாகவே அரசுக்கெதிரான போராட்டத்தை உண்டுபண்ண வல்லவை; அவற்றை ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் அவசியம்.

மக்கள் தெரிந்தெடுத்த ஆட்சியை, குழப்பத்தால் கவிழ்க்க முயல்வதை எவரும் ஆதரியார். அப்படி ஆதரிப்பவர்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத சமூக விரோதிகளே.

அதேபோன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி, மக்களுக்கு நியாயம் வழங்கத் தவறிஞல் நாட்டில் அமைதிநிலவுவது எங்ஙனம்?

முற்போக்கு ஆட்சியென்று இடதுசாரித் தலைவர்கள் கொண்ட அரசை 1971ல் நிறுவியவர்கள் பெரும்பான்மையான இளைஞர்களே! ஏமாற்றமடைந்த நிலையில் அதற்கெதிராகப்பயங்கரவாதச் செயலில் இறங்கியவர்களும் அவர்களே!

வடபகுதியிலும் அதே நிலை. அதனைவிளக்கி வாசகர்களைத் துன்பநிலையில் இட்டுச் செல்வது உசிதமல்ல; இதன் படிப்பினை வீணுகப் போகலாகாது.

இவையெல்லாம் எதனை விளக்குகின்றன? இந்த நாட்டின் இன்றைய உலகம் இளைஞர் உலகம்; ஜனத்தொகையில் 60 சதவீதம் 30 வயதுக்குள் அடங்கிய இளைஞர்களும் யுவதிகளும்.

இவர்களின் பிரதிநிதிகள் முதிர்ச்சியுடையவராகவிருந்தபோதிலும் இவ்விளைஞர்களின் மனப்போக்கை உலக ரீதியில் கணிக்கவேண்டும்; ஒரு வருடத்துக்குமேல் ஒரு பல்கலைக்கழக மாணவனைத் தடுப்புக்காவலில் எவ்வித விளக்கமுமின்றி, அவருடைய படிப்புக்கு நாசம் விளைவிக்கும் வகையில் சிறைப்படுத்திவைப்பதை எவர் – இளைஞனே முதியவரோ ஏற்றுக்கொள்வார்? 2000 மாணவர்கள் ஊர்வலத்திலும் உண்ணுவிரதத்திலும் இறங்கிய பின்னரே ஆட்சியாளர் கண்திறந்திருக்கின்றனர்.

தென்னிலங்கையில் குறிப்பாக சிங்களமாணவர்களின் குறைகள் எத்தனை? இவை எல்லாம் இளைஞர் உலகத்தை செவ்வனே புரிந்து கவனிக்கவேண்டிய விடயங்கள். அடக்குமுறை அவசியமாஞலும் நிரந்தர அமைதியை ஏற்படுத்த மாட்டாதென்பது கடந்த பதினெரு வருடக்கதை.

---

யாழ்-மாவட்டம் : பல்கலைக்கழக அனுமதி:

# தகுதியானவர்களோ அதிகம்; அனுமதி கிடைப்பதோ மிகக் குறைவு!

## துணைவேந்தர் 'வித்தி' கவலை

(மாவிட்டபுரம்)

''யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களது தொகையை நோக்கும்போது பேரதிர்ச்சியாக இருக்கின்றது. பல்கலைக்கழகம் புகுவதற்கு தகுதியுள்ள ஏராளமாஞேர் இருந்தும் குறிப்பிட்ட அளவினருக்கே இடம் கிடைக்கின்றது. இந்த நிலைக்கு தீர்வு காண்பது அவசியமாகின்றது''

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி உயர்தர மாணவர் மன்ற இராப்போசன விருந்து வைபவம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் அதிர்ச்சி தெரிவித்தார்.

மாணவர் மன்றத்தலைவர் செல்வன் பொ. இராஜசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:–

நடேஸ்வராக் கல்லூரியின் வரலாறு ஈழத்துக்கிராமப் பகுதிகளிலுள்ள ஏனைய இந்துக்கல்லூரிகளின் வரலாறு போல மேடும் பள்ளமுமாக அமைந்துள்ளது. அந்நியர் ஆட்சியில் ஆதிக்கம் பெற்றிருந்த மிஷன் பாடசாலைகளுடன் போட்டியிட்டு அரச உதவிகள் இன்றிபெரும் முயற்சியின் பயனுக இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. ஆறுமுக நாவலர் வழியில் வீமன்காமம் சின்னத்தம்பி உடையார் 19ம் நூற்ருண்டின் இறுதியில் நிறுவிய தமிழ்ப்பள்ளிக்கூடம் தான் இன்றுநடேஸ்வராக் கல்லூரியாக மிளிர்கிறது. இதனைத் தொடர்ந்தும் கட்டிக்காத்து வளர்ப்பது நமது கடமையாகும்.

''நமது நாட்டைப் பொறுத்தவரை கடந்த 40 ஆண்டுகளாக கல்வியில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வந்தபோதும் பல்கலைக்கழக புகுமுக விடயத்தில் இன்றும் அதிக சீரழிவு நிலவுகிறது. யாழ். மாவட்டத்தில்பல்கலைக்கழகம் புகுவதற்கு தகுதியான மாணவர்கள் தொகையோ மிக அதிகம் ஆனுல் அனுமதிக்கப்படுபவர்களோ மிகக் குறைவு. யாழ். மாவட்டத்திலிருந்து மருத்துவ பீடத்திற்கு 41 மாணவரும் உயிரியல் துறைக்கு 50 மாணவரும் பொறியியல் துறைக்கு 62 மாணவரும், பௌதிகத் துறைக்கு 60 மாணவரும்தான் அனுமதி பெறுகின்றனர். எஞ்சிய மாணவர்களது எதிர்காலம் என்ன? சிந்திக்க வேண்டும்.

''இந்த விடயத்தில் பெற்ருேரும் கவனம் எடுக்க வேண்டும். தமது பிள்ளைகளது எதிர்காலம் குறித்து அவர்கள் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். பல்கலைக்கழகம் செல்வதைமட்டும் குறிக்கோளாகக் கொள்ளாது தொழில் நுட்பத் துறைகளில் தமது பிள்ளைகளுக்கு நாட்டத்தை ஏற்படுத்தவேண்டும். தொழில்நுட்பத்துறையினருக்கு இன்று நல்ல மதிப்பு ஏற்பட்டிருக்கிறது, ஆகவே அத்துறைகளிலும் நாம் கவனம் கொள்ள வேண்டும்'' என்ருர்.

கல்லூரி அதிபர் திரு. இ. க. குலசேகரன் பேசுகையில்:– ''இளஞ்சந்ததியினருக்கு சிறந்ததோர் வழிகாட்டியாக விளங்கும் பெரியார் ஒருவரை இவ்விருந்துக்கு அழைத்ததையிட்டு பெருமைப்படுவதாகவும் எமது மாணவ சமுதாயத்திற்காகவும் தமிழ் சமுதாயத்திற்காகவும் அவர் ஆற்றும் பணி பாராட்டப்பட வேண்டியதென்றும் குறிப்பிட்டார்.

திரு. என். நவரத்தினம் (ஆசிரியர்) திரு. க. கருணநிதி ஆகியோர் உட்பட பலர் பேசினர்.

---

# அழைக்கும்இடத்தில்எல்லாம் அவன் வருவான்!

முருகனுக்குக் குறிஞ்சிக்கிழவன் என்று ஒரு பெயர் உண்டு. கிழவன் என்பதற்கு வயோதிடன் என்ற பொருள் மட்டுமன்றி உரிமையுடையவன் என்ற பொருளும் உண்டு. குறிஞ்சியாகிய மலைப்பிரதேசத்திற்கு உரிமையுடையவன் என்ற பொருளிலேயே முருகனைக் குறிஞ்சிக்கிழவன் என்பர். பண்டைத்தமிழர் நானிலத்தை ஐந்திணைகளாகப் பகித்து ஒவ்வொரு பகுப்பிற்கும் பல பொருட்களை உரித்தாக்கினுர்கள். அவ்வகையில் மலையும் மலைசார்ந்த நிலமுமாகிய குறிஞ்சித் திணைப் பகுதிக்குரிய தெய்வமாக முருகன் விளங்குகின்ருன். இந்த அடிப்படையில் சிந்தித்துப் பழகிய பலர் மலையிடங்களே முருகன் வசிக்கும் இடம்என்று நம்பிவிடுகின்றனர். முருகனிடம் செல்வதற்கு வழிகாட்டும் நூலாகிய திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் திருப்பரங்குன்று முதலிய ஆறு மலையிடங்களைக் குறிப்பிட்ட பின்னர் சந்தியும் சதுக்கமும் வெளியும் வெறியாடுகளனும் ஆகிய இடங்கள் மட்டுமன்றி அன்பர் அழைக்கின்ற எல்லா இடங்களிலும் முருகன் வெளிப்படுவான். அப்படி வெளிப்படும் இடங்களில் பலவற்றில் ஏதாவது ஒரு இடத்தில் வழிபடுவாயாயின் நீ உன் குறையை தெரிவிக்குமுன்பே முருகன் உன்னியல்பை அறிந்து அருள் புரிவான் என்று கூறுகின்ருர்.

இவ்வாறு நக்கீரர் கூறும் கருத்து பூரணமான உண்மை என்பதை நாம் தெளிவதற்கு பல முருகன் கோவில்கள் அருட்பொலிவுடன் விளங்குகின்றன. அடியார் அன்புக்கும் இடம் எங்கும் வெளிப்பட்டு அருளும் கருணைத்தெய்வமான முருகனின் புண்ணிய காலங்கள் பல அவற்றுள் வைகாசி விசாகமும் ஒன்று. இதனுல் முருகனுக்கு விசாகன் என்றும் திருநாமம் உண்டு. சூரசம்காரம் செய்வதற்கும் சிவாபசா

-- அருளாளன் --

(5–ம் பக்கம் பார்க்க]

---

## மக்கள் கருத்து

### திருமதி குருசாமி மறுப்பு

27–5–82ம் திகதி ஒரு பத்திரிகையின் முற்பக்கத்தில் (ஈழநாடு அல்ல) ''கருணை காட்ட வேண்டாம்'' தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு ''கைம் பெண்கள் தந்தி'' என்றதலைப்பில் செய்திவெளியாகிருந்தது.

அகால மரணமடைந்த பொலிஸ் இன்ஸ்பெக்டரான திரு. குருசாமியின் மனைவியாகியதையல் அம்பால் குருசாமி ஆகிய நான் எச்சந்தர்ப்பத்திலும் மேற்படி விடயம் பற்றி முதலமைச்சருக்கு எழுத்து மூலமோ அல்லது தந்தி மூலமோ எதுவித செய்தியும் அறிவிக்கவில்லை என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். இதை தங்களுடைய ஈழநாடு பத்திரிகையின் மூலம் மக்களுக்கு அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

- தையலம்பால்

ஒட்டுமடம்,

யாழ்ப்பாணம்.

---

திருக்கேதீஸ்வரத்தில் இன்று தேர்திருவிழா

## கருணை மாநிதியே போற்றி

கவுணியர்க் கிறையே போற்றி!
கடிமலர்ப் பாதா போற்றி!!
கரியுரி போர்த்தாய் போற்றி!
கழலணி பாதா போற்றி!
கருணைமா நிதியே போற்றி!
சயிலையில் வளர்வாய் போற்றி!!
கௌரியோ டுகந்தாய் போற்றி!
கேதீஸ்வரா போற்றி போற்றி!!

மின்னெளிர் எழிலோய் போற்றி!
பண்ணினில் மகிழ்வோய் போற்றி!!
மென்னகை முகத்தோய் போற்றி!
எஃபணி அழகா போற்றி!!
கொன்றைவார் சடையோய் போற்றி!
வெண்பொடி யணிவோய் போற்றி!
பொன்னெளிர் திருவே போற்றி!
கௌரீஸ்வரா போற்றி போற்றி!!

மந்திர ஒலியே போற்றி]
மந்திர வடிவே போற்றி!!
தந்திர வழியே போற்றி!
அந்தமொன் றில்லாய் போற்றி!!
சுந்தர வடிவே போற்றி!
சுந்தரர் தோழா போற்றி!!
பந்தமொன் றில்லாய் போற்றி!
கேதீஸ்வரா போற்றி போற்றி!!

-'முருகு'

# விமலராசாவை விசாரணை

## அல்லது விடுதலை செய்ய வேண்டும்

### யாழ். பல்கலைக்கசிகபணியாளர் சங்கம்கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

400 நாட்களுக்கு மேலாக எந்தவித நீதி விசாரணையும் இன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பனுகொடை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவன் அப்புலிங்கம் விமலராஜாவை உடனடியாக நீதி விசாரணை செய்ய வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டுமென்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பணியாளர் சங்கம் கோரியுள்ளது.

அக் கோரிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''மேற்படி மாணவனின் குடும்பநிலைமையும், கல்வி வாழ்க்கையும் மீள ஒழுங்கமைக்கப்பட வேண்டுமானால், அவரை உண்மையான ஜனநாயக முறையின் கீழ் கொண்டுவந்து நீதிமன்ற விசாரணைக்கோ அல்லதுஏனைய ஜனநாயக அம்சங்களுக்கோ உட்படுத்தி அவரின் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர அரசு வழிசெய்ய வேண்டும்.

மாணவன் என்ற ரீதியில் அரசியல் நிலைப்பாடுகளுக்கப்பால் மாணவனுக்குரிய அவரது அம்சங்களை அங்கீகரித்து விமலராஜாவை நீதியான ஜனநாயகத்துக்கு உட்படுத்துமாறு பல வட, தென் இலங்கைப் பல்கலைக்கழக, கல்லூரி மாணவர்களும், மற்றும் வெகு ஜன ஸ்தாபனங்களும், முற்போக்கு நிறுவனங்களும், கோரிக்கைவிட்டபோதும் அரசின் கண்மூடித்தனமான போக்கு ஜனநாயக விரோதத் தன்மையையே எடுத்துக்காட்டுகிறது.

ஆகவே இத்தகைய ரீதியில் விழிப்புக் கொண்டுள்ள இச் சக்திகளின் எழுச்சிக்கு உண்மையான முக்கியத்துவத்தைக் கொடுத்து விமலராஜாவை உடனடியாக ஜனநாயக நீதி முறைமையின் கீழ்கொண்டு வருமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பணியாளர் சங்கம் வேண்டிக்கொள்கிறது. [க]

---

# ''கல்வியினுல் மட்டும் நற்பண்புகள் ஏற்படாது''

## நடேஸ்வரா அதிபர் கூறுகிருர்

(மாவிட்டபுரம்)

''சிறு பிள்ளைகள் சமூக உணர்ச்சியையும். சமாதான சகவாழ்வையும் இளம் வயதிலேயே பயில்வதற்கு மெய்வல்லுநர் போட்டிகள் வழிவகுக்கின்றன. குழந்தைகளின் உளவியல் மேதை ஜீன் பியாஜே இக்கருத்தை வலியுறுத்தியிருக்கிருர். ஆகவே பெரிய கல்லூரிகளில் மட்டும் தான் மெய்வல்லுநர் போட்டிகளில் என்றில்லாமல் சகல சிறிய கல்விக்கூடங்களிலும் இப்போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.''

இவ்வாறு மாவிட்டபுரம் ஈஸ்வரி சிறுவர் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியில் இடம்பெற்ற சமயம் அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசிய காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. இ. க. குலசேகரன் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

''ஒரு சமுதாயத்தில் இளம் பருவம் மிக முக்கியமானதோர் பருவமாகும். இப்பருவம் கல்வி பெறுகின்றமுறையில் பாடசாலைகளிலேயே கழிகின்றது. ஆகவே இப்பருவத்திலே மாணவர்களைச் சிறந்தவர்களாக ஆக்கி நாட்டுக்கேற்ற பிரஜைகளாக மாற்றுவது அவசியமாகிறது. கல்வி மட்டும் மாணவர்களிடையே நற்பண்புகளை வளர்க்கமுடியாது. இவ்வாறுன மெல்வல்லுநர் போட்டிகள் மூலம் பல்வேறு நற்பண்புகள் வளர முடியும். அதுவும் சிறுர்களிடையே நடத்தப்படும் மெய்வல்லுநர் போட்டிகள் மூலம் சிறந்த பண்புகள் சிறு வயதிலிருந்தே வளரமுடியும்.',

இப்போட்டியை ஏற்பாடு செய்த ஆசிரியை செல்வி விசுவநாதனின் முயற்சியையும் அவர் பாராட்டினுர்.

திருமதி தேவகன்யா குலசேகரன் பரிசில்கள் வழங்கினுர்.

---

## கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

பண்ணுகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் சம்புரோஷண மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெறவிருக்கிறது.

கடந்த 15ம் திகதி கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகின.

இன்று முருகப்பெருமானுக்கு அடியார்கள் எண்ணய் சாத்துதலும் நாளை காலை தூபி அபிஷேகமும், நடைபெறும். (மா)

---

## ஏ. எஸ். பி யின் துப்பாக்கி திருட்டு

(கல்முனை)

கல்முனை உதவி பொலிஸ் அதிபர் திரு. நிமல் சில்வாவின் வீட்டில் அவரது ரிவோல்வர் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

கடந்த மாதம் 29ம் திகதி இரவு கொள்ளை நடந்துள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இது வரை சந்தேக நபர் எவரும் கைதாகவில்லை. விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது, (க)

---

## கிளிநொச்சிப் பகுதி கிராமோதய சபை தலைவர்கள் கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதிக் கிராமோதய சபைத் தலைவர்களின் கூட்டம், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இப்பகுதியில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள், கிராமோதய சபைக்குள்ள கடமைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

---

## சுயமுயற்சி மூலம் எமது பகுதிகளை முன்னேற்ற வேண்டும்

### அரசின் உதவியை எதிர்பார்ப்பதில் பயனில்லை என்றும் கூறுகிருர் 'சங்கரி'

(கிளிநொச்சி)

நாம் எதற்கும் அரசின் உதவிகளை எதிர்பார்க்காமல் நமது சுயமுயற்சி மூலம் எமது பகுதிகளை முன்னேற்ற முன்வரவேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கிளிநொச்சி எம். பி. திரு ஆனந்த சங்கரி குறிப்பிட்டார்.

மேற்படி வித்தியாலய அதிபர் திரு. இராஜேந்திரம் தலைமையில் றெட்றிக்கோ விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழாவில் திரு. ஆனந்தசங்கரி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கிளிநொச்சியில் முதன் முதலாக 1929-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் கனிஷ்ட மாகவித்தியாலயமாக இருந்தபோதும் 1500 மாணவர்கள் கல்வி பயின்றுவருகின்றனர். நகரின் மத்தியில் இருக்கும் இப்பாடசாலையின் தேவைகளை நிறைவேற்ற நான் என்றும் பின்நின்றதில்லை.

இப்பாடசாலையின் இட நெருக்கடியைநீக்குமுகமாகவே இரண்டு லட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டிடம் ஒன்றை அமைக்க ஒழுங்கு செய்தேன். கூடிய விரைவில் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றையும் பெற்றுத்தருவேன்.

சிறப்பு விருந்தினராக திரு இ. கிருஷ்ணராசாவும் உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியமும் கலந்து கொண்டனர்.

மூலாதாரப் பாடசாலை அதிபர் திரு. ரா. சின்னத்தம்பி, வட்டாரக்கல்வி அதிகாரி திரு. தங்கராசா ஆகியோரும் உரையாற்றினுர்கள். (இ)

---

## காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையில் அநாமதேய துண்டுப்பிரசுரம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்ட வேலைப் பிரிவில் விநியோகிக்கப்படுவதாகக் கூறப்படும் அநாமதேய துண்டுப்பிரசுரங்கள் மேற்படி 3ம் கட்ட வேலைப்பிரிவில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த சில வாரங்களின் முன்பு ''றேணியோ'' இயந்திரத்தில் அச்சிடப்பட்ட அநாமதேய துண்டுப்பிரசுரம் ஒன்று மேற்படி 3-ம் கட்ட வேலைப்பிரிவில் விநியோகிக்கப்பட்டதாகவும் அதன்பின் தற்போது அச்சில் இடப்பட்ட மற்றேர் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப் பட்டதாகவும் கூறப்படுகிறது.

இப்பிரசுரங்களில் 3ம் கட்ட வேலைப்பிரிவில் இடம்பெறுவதாகக் கூறப்படும் ஊழல்சள், தொழிலாளர்களுக் கெதிரான நடவடிக்கைகள், அதிகாரிகளின் சர்வாதிகாரப் போக்கு என்பவற்றை கண்டித்திருப்பதாக கூறப்படுகிறது.

இப்பிரசுரங்கள் மேற்படி 3ம் கட்டவேலைப்பிரிவில் சலசலப்பை தோற்றுவித்துள்ளதாகவும். இவை குறித்து ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

---

## புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பணிப்பாளர் சங்க 7 வது பொதுக்கூட்டம் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் திரு. கோ. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:- திரு. ஆ.குணரத்தினம், உப தலைவர்:- திரு. கோ. பாஸ்கரன், பொதுச் செயலாளர்;- திரு. ப.சற்குணராஜா, உப செயலாளர்;-திரு. ச. யோ. மரியநாயகம், பொருளாளர்;- திரு. செ. குமாரசாமி, உப பொருளாளர்:- திரு. இ. சண்முகலிங்கம், பத்திராதிபர்:- திரு. நா. கணேசலிங்கம். பொது நல உத்தியோகஸ்தர்கள்:- திரு. க. இரத்தினசபாபதி, அத்துடன் பல்கலைக்கழகத்தின் நிர்வாகப்பிரிவுகள் உட்பட சகல பீடங்களுக்குமாக அப்பகுதிகளைச் சேர்ந்த 9 பேர் செயற்குழு உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். [கி]

---

## விவசாயிகள் கூட்டம்

[மன்னுர்]

மன்னுர் உயிலங்குளம் மோகன் தியேட்டரில் எதிர்வரும் 9-ம் திகதி கட்டுக்கரை குளத்திட்டத்தின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கான கூட்டம் ஒன்று மன்னுர் அரசாங்க அதிபர் திரு. டி.வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கட்டுக்கரை குளத்திட்டத்தின் கீழ் 82ம் 83ம் ஆண்டுகளில் காலபோக விவசாயம் செய்வது தொடர்பாக ஆராயப்படும்.

---

## மீன்வாடியிலிருந்து ரூ.4,000 கருவாடு திருட்டு!

(மாவிட்டபுரம்)

மீன்வாடி பிரிக்கப்பட்டு அங்கிருந்த 4 ஆயிரம் ரூபா பெறுமதியான கருவாடு களவாடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று மயிலிட்டியில் இடம்பெற்றுள்ளது.

மயிலிட்டி மீன்பிடித்துறை முகத்திற்கு அருகிலிருக்கும் மீன்வாடியை இரவுநேரம் பிரித்த இனந்தெரியாதவர்கள் அங்கிருந்த 4 ஆயிரம் ரூபா பெறுமதியான கருவாடுகளை களவாடிச் சென்றுவிட்டதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் புலன் விசாரணையில் இறங்கியுள்ளனர்.

---

## தேடுவாரற்றுக்கிடந்த கடத்தல் பொருட்கள்

(மன்னுர்)

மன்னுர் ஓலைத்தொடுவாய் கடற்கரையில் தேடுவாரற்ற நிலையில் காணப்பட்ட பல்லாயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களையும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றினர்.

இரகசிய தகவல் ஒன்றினையடுத்து ஓலைத்தொடுவாய் கடற்கரைக்குச்சென்ற பொலிசார் தேடுவாரற்ற நிலையில் காணப்பட்ட கடத்தல் பொருட்களையும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றினர்.

கடத்தல் பொருட்களை படகில் ஏற்றும் சமயம் பொலிசார் சென்றதால் கடத்தல் பொருட்களை கைவிட்டு விட்டு படகில் தப்பிச் சென்றிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

---

## மாற்றம் பெற்ருர்

(வவனியா)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற -பிரச்சாரப் பகுதியில் கடமையாற்றிய திரு. செகராசசிங்கம் சிவபாலசிங்கம் இம் மாதம் 1-ம் திகதி தொடக்கம் வவனியா மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்திற்கு மாற்றம் பெற்றுள்ளார்.

மன்றத்தின் மாத வெளியீடான இளைஞன் பத்திரிகையின் ஆசிரயரும் இளைஞர் சேவை அதிகாரியுமான இவர் கொழும்பு பல்கலைக்கழக அபிபுருத்தி கல்வி பட்டதாரியாவர்.

---

## கறுப்புப்பட்டி வழங்கிய இளைஞர் கைதாகி விசாரணையின்பின் விடுதலை

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் நடைபெற்ற உண்ணுவிரதத்தின் போது, யாழ். பொதுசன நூல்நிலையத்தின் முன்புற வாயிலடியில் வைத்து இளைஞர் ஒருவரை இரகசியப் பொலிசார் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்திய பின்பு விடுவித்தனர்,

ரி. வேலாயுதபிள்ளை என்ற இளைஞரே விசாரணைக்குட்படுத்தப்பட்டவராவார். இவர் கறுப்புப் பட்டிகளுடன் நின்ற பொழுதே கைதுசெய்யப்பட்டார்.

நேற்று இரு பிரிவாக நடைபெற்ற உண்ணுவிரதத்தில் ஒரு பிரிவினருக்கு கறுப்புப் பட்டிகள் கொடுத்துவிட்டு, மற்றைய பிரிவுக்கும் வழங்கச் செல்லும்பொழுது சந்தேகப் கொண்ட இரகசியப் பொலிசார் இவரைக் கைதுசெய்து குருநகர் முகாமில் விசாரணை செய்தபின் விடுவித்தனர். (மா)

---

## அழைக்கும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ரத்தால் வருந்தியதேவர்களை ஈடேற்றவும் வேண்டி ஆறுதிருமுகங்களோடு முருகன் அவதரித்த தினமே விசாக நன்னுளாகும். இத்தினத்தில் அவதரித்த முருகன் தேவர்களை புனிதராக்கியாண்டது மட்டுமன்றி சூரபத்மனுக்கும் தன் திருவடிக் கீழ் வாழ்வு அருளிய செயலையும் மறவாது முருகனருளில் ஈடுபடுவதற்கு விசாக நாள் பொருத்தமானதாகும். முருகப்பெருமானின் திருமேனி சோதிமயமானது என்பதை ''பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகி'' என்பர் கச்சியப்பர். வேதமந்திர சொரூபா! என்பர் அருணகிரியார் நீர் உறைந்து கட்டியாவது போல வேத மந்திரம் – பிரமமாய் நின்ற சோதி – திரண்ட உருவமே முருகன் உருவம் என்பதை மறவாமலிருந்தால் அறிவொளியிலும் மனவொளியிலும் மந்திர ஒலியிலும் முருகன் திருவருளைக் காணலாம்.''

பேசாலை-தாழ்வுபாடு மீனவர் பிரச்னை:

# "வன்செயல்தடுப்பு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குங்கள்"

## மன்னார் அ. சபைத் தலைவருக்கு காந்தீய இயக்க செயலாளர் மகஜர்

(மன்னார்)

"பேசாலை தாழ்வுபாடு ஆகிய கிராமங்களுக்கு இடையே தொடர்ந்து இடம் பெற்று வரும் மோதல்களைத் தடுக்கும் பொருட்டு மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபை தலைவர் திரு. பி. எம். செபமாலை மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் திரு இராஜேஸ்வரன் மீன்பிடிவிஸ்தரிப்பு அதிகாரி ஆகியோர் கொண்ட குழு ஒன்றை அமைத்து இருகிராமத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களை அழைத்து தற்காலிக வன்செயல் தடுப்பு ஒப்பந்தமொன்றை செய்து வைக்கவும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றினை மன்னார் மாவட்ட காந்தீய இயக்கச் செயலாளர் திரு. பி. சித்தாந்துரை மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. பி. எம். செபமாலையிடம் கையளித்துள்ளார்.

இம் மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது தாழ்வுபாடு பேசாலை ஆகிய இரு கிராமங்களுக்குமிடையே இடம் பெற்று வரும் மோதல்கள் தொடர்பாக நான் ஏற்கனவே தங்களுடன் கலந்துரையாடினேன்.

அவ் இனத்தைச் சேர்ந்த இரு கிராம மக்கள் ஏதோ விதிவசத்தால் தம்மிடையே பகைமையை வளர்த்துக் கொண்டு போவதை இரண்டு கிராமங்களிலும் அக்கறையுள்ளவர்கள் பார்த்துக் கொண்டு கண்மூடிமொனியாக இருக்க முடியாது.

ஆதலால் இவ்விரு கிராம மக்களிடையே நீடித்த அமைதியை ஏற்படுத்தவும் பிரச்சனைகளை ஆராய்ந்து இதுவரை ஏற்பட்ட அழிவுகளுக்கு பரிகாரம் காணும் வகையில் தாங்கள் முன்னின்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றேன்.

தற்காலிக வன்செயல் தடுப்பு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு காவல் துறையினர் தாழ்வுபாடு பேசாலை ஆகிய கிராமங்களிலும் பேசாலை மன்னார் பிரதான வீதியிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

சிறுத்தோப்புக்கும் பேசாலைக்குமிடையே உள்ள கடல் பிரதேசத்தைக் கண்காணிக்கும் பொருட்டு அப்பகுதியில் ஓர் காவல் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும்.

இரு கிராமங்களுக்கு மிடையில் ஏற்பட்ட பிரச்னைகளை இரண்டுவார காலத்துக்குள் ஆராய்ந்து நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்.

விசாரணை முடிவுகளையும் இப்பிரச்னைகளுக்கு எவ்வாறு முடிவு காணலாம் என்பதையும் இருகிராமத்தைச்சேர்ந்த பிரதிநிதிகளுடன் ஆராய்தல் வேண்டும்.

தங்களுக்குப் பொருத்தமானதெனத் தோன்றும் இதர முறைகளையும் கையாண்டு இருகிராமத்திற்குமிடையே அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கவும் என கூறப்பட்டுள்ளது.

## தாழ்வுபாடு கிராமவாசிக்கு பலத்தகாயம்

(மன்னார்)

மன்னார் பட்டினத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாழ்வபாடு கிராமத்தைச் சேர்ந்த கோஷ்டிக்கும் பேசாலை கிராமத்தைச் சேர்ந்த ஒரு கோஷ்டிக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் தாழ்வுபாடு கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளானார்.

தாழ்வுபாடு, பேசாலை ஆகிய இருகிராமத்தவர்களுக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் இடம் பெற்று பலர் காயமடைந்து வருவதோடு மன்னார் தலைமன்னார் வீதியில் போக்கு வரத்துக்கும் இடையூறு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு மோதலில் ஈடுபடுவோர் மீதும் அமைதிக்கும் பங்கம் விளைவிப்போர் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு இரு கிராமத்தவர்களும் அமைதியுடன் இருக்க வேண்டும். சட்டவிரோதமாகவும் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துவோரும் பொலிசாரினால் கைது செய்யப்படுவார்கள் என மன்னார் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை தாழ்பாடு பேசாலை ஆகிய இருகிராமங்களுகுமிடையில் ஏற்பட்டு வரும் மோதல்களை தடுத்து நிறுத்தி அமைதியை ஏற்படுத்தி சமானத்தை ஏற்படுத்தும் பொருட்டும் இன்று (3-ம் திகதி) தாழ்வுபாடு பேசாலை ஆகிய இருகிராமங்களும் சமாதானக் கூட்டங்கள் நடைபெறும்.

இவ்விருசமாதானக் கூட்டங்களிலும் மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன் மன்னார் உதவி அரசாங்க அதிபர் வி. வைரமுத்து, மன்னார் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். தீவகலாஸ், மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ்வரன், மன்னார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஞானப்பிரகாசம் இராணுவத்தளபதி மதகுருமார் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொள்வார்கள்

சிகரட் வான் கொள்ளை:

## துப்பாக்கி, பணம் மீட்பு; இருவர் கைது!

(வவனியா)

அண்மையில் நிகழ்ந்த சிகரட் வான் கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்களை வவனியா பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்ட துப்பாக்கியும் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தின் ஒரு பகுதியும் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார்-மதவாச்சி வீதியில் 107-வது மைலில் வவனியாவிலிருந்துசெட்டிகுளம்நோக்கி விற்பனைக்குச்சென்ற இந்த சிகரட் வானிலிருந்து துப்பாக்கி சகிதம் முகமூடி அணிந்த இரண்டு இளைஞர்களினல் 12 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது வாசகர்களுக்குத் தெரிந்ததே.

இதுதொடர்பாக வவனியா பொலிசார் மேற்கொண்ட தீவிர புலன்விசாரணைகளைத் தொடர்ந்து நேரியகுளத்தில் ரூ. 4,090 ரொக்கப்பணத்தையும் இரண்டு துப்பாக்கிகளையும் கைப்பற்றி நித்தியானந்தன் என்று அழைக்கப்படும் செபஸ்தியன் டேவிட், ரஞ்சன் என அழைக்கப்படும் மாக்கு அப்பன்சோ ஆகிய இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

உதவிப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. ஜேசப் சார்ஜன்ட் தோபிஸ் ஆகிய இருவரும் மேற்படி விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# நம்பிக்கை மோசடி

## வழக்கில் எதிரி விடுதலை

[சாவகச்சேரி]

5000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை நம்பிக்கை மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு, பளை சுற்று நீதி மன்றத்தில், எம், எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

செம்பியன்பற்று மாமுனையைச் சேர்ந்த வே. சந்திரசேகரம் என்பவர் தனது சகோதரியாகிய கலவெட்டித் திடல் கண்டாவளையைச் சேர்ந்த ஐபாத்துரை மனைவி செல்வக்கொழுந்து 5000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை மோசடி செய்ததாக ஒரு பிரத்தியேக வழக்கு பளை சுற்றுநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது

இன்று பளை சுற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளபபட்ட பொழுது எதிரி சமுகமளித்திருந்தார் முறைப்பாட்டுக்காரர் சமுகம் கொடுக்கவில்லை.

எதிரிகள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் இது ஒரு பிரத்தியேக வழக்காக இருப்பதால் முறைப்பாட்டுக்காரர் கண்டிப்பாகச் சமுகங்கொடுத்திருக்க வேண்டும் என்றும் எனவே அவர் சமுகமளிக்கத் தவறியபடியால் எதிரியை விடுதலை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி எதிரியை விடுதலை செய்தார். (க)

சீமெந்துமோசடி வழக்கு:

## 1-ம் எதிரி விடுதலை; 2-ம் எதிரி குற்றவாளி

(சாவகச்சேரி)

நாவற்குளி வீடமைப்புத் திட்ட சிமெந்து மோசடி வழக்கில் 1ம் எதிரி விடுதலை செய்யப்பட்டார். 2ம் எதிரி குற்றவாளியாக காணப்பட்டார்,

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் '9 மார்ச் 4ம் திகதி நாவற்குளிவீடமைப்புத் திட்டத்தைச்சேர்ந்த க. ரவீந்திரநாதன், க. சிங்கராசா என்பவர்கள் 455 ரூபா 20 சதம் பெறுமதியான 14 சிமெந்து பாக்குகளை களவாடியதாகக் குற்றஞ்சாட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குற்றவாளியாகக் காணப் போதிய சாட்சிகள் இல்லாமையால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

2ம் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டு தீர்ப்பு வழங்குவதை ஜூன் 7ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

(கு)

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 2ம் திகதி

வியாழக்கிழமை

(3—6—82)

மேடம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள். காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்து ஒன்று கிடைக்கும். மகிழ்ச்சியான தினம்.

இடபம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராதவிதமாகச் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். உள்ளக் கிடக்கைகளை மாற்றிக்கொள்ள நேரிடும். நிதானம் வேண்டும்.

மிதுனம்: இன்று முன்னிலையில் நிற்பீர்கள். நல்ல தீர்ப்பு வழங்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கை மேலோங்கும். குறிக்கோளில் வெற்றி கிடைக்கும்.

கடகம்: கடமையில் ஆர்வம் பிறக்கும். இதன் மூலம் புதிய பாதை திறக்கும். வெளியிடத் தொடர்புகளில் நல்ல திருப்பம் ஏற்படும். பொன்னான நாள்.

சிங்கம். வரவில் உயர்வு காணும். வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும். அயலவர்களின் வாழ்த்தும் அவசியம் கிடைக்கும். தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

கன்னி: அற்ப விடயத்தில் ஆத்திரம் அடைவீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துககொள்ள நேரிடலாம். அடக்கம் வேண்டும். நிதானம் நன்று.

துலாம்: கண்களில் கன்னல் தெறிக்கும். கருத்தினில் ஆர்வம் தோன்றும். கொள்கையில் கோணலாலே குன்றிடும் புகழும்தானே. இக்காலம் பொறுமை நன்று.

விருச்சிகம்: எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம். பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் அதிக பயனடைவர். நீண்டநாள் எதிர்பார்த்த பொருள் வரவு இன்று கிடைக்கும்.

தனு: அவசரக்கோலம் தலைகாட்டும். அதன்வழித் துன்பங்கள் தொடரும். ஆசாரக் குறைவும் உண்டு. அடக்கம் நன்று. அமைதியும் வேண்டும்

மகரம்: விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். எதிர்பார்த்த கடன் கிடைக்கும். சிலருக்கு அரசினர் ஆதரவும் உண்டு. பொன்னான நாள்.

கும்பம்: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவும் தப்பாமல் கிட்டும். நல்ல தினமாகும்.

மீனம்: எதிரிகளின் சூழ்ச்சி பலமாக இருக்கும், தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் முளைக்கக்கூடும், கூர்மையான ஆயுதங்களுடன் பழகுபவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## ஸ்ரீவரதவிக்கின விநாயகர் உற்சவம்

[யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரதவிக்கின விநாயகர் கோவில் ஏகதின இலட்சார்சனையும், அக்கினி வழிபாடும் 6ந்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றன.

அன்றையதினம் பகல் விநாயகப் பெருமானுக்கு விசேட அபிடேக அக்கினியாக ஆராதனைகள் நடைபெறும். இரவு திருவீதி உலாவும் இடம்பெறும். கிரியைகளை பிரம்மஸ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்கள் தலைமை வகித்து நடத்துவார். [கி)

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தென்மேற்கு கரையோரப் பகுதியில் கடும் காற்றுடன் மழை பெய்யுமென வானொலி ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது. கடற்றொழிலாளர் தொழிலுக்குச் செல்லக்கூடாதென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்கள்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நேற்றுக் காலை வரை கடும் காற்றுடன் மழைபெய்தது. (க)

## உலக பௌத்த மாநாடு: ஞாபகார்த்த முத்திரை

(கொழும்பு)

உலக பௌத்த மாநாட்டையொட்டி ஞாபகார்த்த முத்திரை யொன்றை தபால் தந்தி தொடர்புகள் அமைச்சுநேற்று வெளியிட்டது.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இம்மாநாடு எதிர் வரும் 5ம் திகதி முடியடையும். [வெ]

## குறிஞ்சிப் பாடியில் தடை உத்தரவு

சென்னை. ஜூன். 2

குறிஞ்சிப்பாடியில் நடந்த மோதலைத்தொடர்ந்து 15நாட்களுக்கு ஊர்வலங்கள் கூட்டங்கள் நடத்தக்கூடாதென்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**ஹரன்** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
**எங்க தங்கராஜா**
(புதிய பிரதி)


## உற்சவம்

[சரவணை]

புங்குடுதீவு - பெருங்காடு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் சென்ற வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இம் மாதம் 5ந் திகதி தேர்த் திருவிழா நடைபெறும்.


**வெஸ்லி** இன்றுமட்டும் மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
விசேட மெட்னி காட்சி
தினசரி 2-30
கமல் — ஸ்ரீபிரியா
**நீயா?** இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி [கலர்]


## சகஸ்ரநாம அர்ச்சனை

[புலோலி]

தென்புலோலியூர் உபய கதிர்காம ஆலய சகஸ்ரநாம அர்ச்சனை இம்மாதம் 4ம் திகதி நடைபெறவுள்ளது.

# ''தமிழ்நாடு சென்றிருக்கும் தமிழ் சட்டத்தரணிகளின் கடவுச்சீட்டை ரத்துச்செய்யுங்கள்!''

## ஜனாதிபதிக்கு 'சிங்கள பால மண்டல' தந்தி

(கொழும்பு)

சென்னையில் கைதான தீவிரவாத தமிழ் இளைஞர்கள் சார்பில் ஆஜராக அங்கு சென்றிருக்கும் சட்டத்தரணி திரு. செ. சந்திரகாசன் உட்பட ஏனைய தமிழ் சட்டத்தரணிகளின் நடவடிக்கைகள்குறித்து 'சிங்களபால மண்டலய' ஜனாதிபதிக்கு ஆட்சேபத் தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அத் தந்தியில்; தீவிரவாத இளைஞர்களை ஆதரித்து இந்தியா சென்றிருக்கும் சட்டத்தரணிகள் மீது வேண்டிய நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறும் திரு. செ. சந்திரகாசனின் கடவுச்சீட்டையும் கூடச்சென்றிருப்போரின் கடவுச்சீட்டுக்களையும் ரத்துச் செய்யும்படியும் ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டுள்ளது.

'சிங்கள பாலமண்டலய' சார்பில் அதன் உதவிச்செயலாளரான திரு. ஜயரசன தஹநாயக்காவேமேற்படி தந்தியை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார். (இ)


**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) 6-6-82 வரை
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-பத்மினி-தங்கவேலு-எம். என். ராஜம்
**தெய்வப்பிறவி** புதிய பிரதி


# அரசியல்வாதிக்கு அனுப்பப்பட்ட சிங்கப்பூர் ஆடைகள், கடிகாரங்கள்

## பொலிஸார் புலன் விசாரணை

(கொழும்பு)

அரசியல்வாதி ஒருவருக்கு சிங்கப்பூரிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பாவித்த ஆடைகள், 4000 கைக்கடிகாரங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளின் அறிக்கைகள் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

புலன்விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார், பிரஸ்தாப அரசியல்வாதி தமக்கு வந்த ஆடைகளுக்கு உரிமை பாராட்டியபோதிலும், கைக்கடிகாரங்கள் தமக்கு அனுப்பப்பட்டவையல்ல என்று தெரிவித்ததாக அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அரசியல் வாதியின் உறவினர் ஒருவரும், பம்பலப்பிட்டியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரும் விசாரிக்கப்பட்டார். (இ)


**ரீகல்** (யாழ்நகர்) 2nd and 3rd தினசரி 5 காட்சிகள்
ROBERT SHAW in
**The Scarlet Buccaneer** (Color)
11-6-82 முதல் ஸ்ரீதரின்:
மோகனப் புன்னகை


### திருக்கேதீஸ்வரத்தில்
## இன்று தேர்

(மன்னார்)

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இன்று காலை 8 மணிக்கு 5 தேர்களில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளிபவனிவருவார்கள்.

இன்று நடைபெறும் தேர்த் திருவிழாவில் தமிழ்நாடு புகழ் நாமகிரிப்பேட்டை கிருஸ்ணன் குழுவினரதும், ஈழத்து நாதஸ்வரமேதைகள் பஞ்சாபிகேசன் குழுவினரதும் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும்.

நாளை (4 ஆம் திகதி) காலை 7 மணிக்கு நடேசப்பெருமான் எழுந்தருளி பாலாவியில்தீர்த்த மாடிய பின் சூர்ண உற்சவம் நடைபெறும். இதனைத்தொடர்ந்து பஞ்சமூர்த்திகள் பாலாவிக்கு எழுந்தருளி தீர்த்த மாடுவார்கள்.


**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

**லிடோ** தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
பெற்றால்தான் பிள்ளையா
(புத்தம்புதிய பிரதி)


## திருவிழா

(சரவணை)

சரவணை - நாரந்தனை ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த 'திருவிழா' சென்ற வியாழக் கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது இம் மாதம் 4ந் திகதி நடைபெறும் பெரிய சப்பறத் திருவிழாவையடுத்து மறுதினம் தேர்த்திருவிழா நடைபெறும் 6ம் திகதி தீர்த்த விழாவும் அடுத்தநாள் பூங்காவனமும் இடம்பெறும்.


**ராணி** (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
Walt Disney's
**Cat From The Outer Space**


## மஹாகவியின் கோடை

சமுதாயத்தில் காணப்படும் சிறுமைகளையும் அநீதிகளையும் ஒரு காதல் சம்பவத்தின் ஊடாக வெளிப்படுத்தி பல சீரிய கருத்துக்களை ''கோடை நாடகம்'' மூலம் வெளிப்படுத்தியுள்ளார் அமரர் மஹாகவி.

முற்றிலும் கவிதைப் பாணியில் கதாபாத்திரங்களை உரையாடவைத்து, பல புதுமைகளைக் கையாண்டு, 'கோடை' நாடகத்தை மேடையேற்றிய நாடக அரங்கக் கல்லூரியை பாராட்ட வேண்டும். நாடகத்தில் எல்லா நடிகர்களும் தங்கள் பாத்திரங்களை உணர்ந்து சிறப்பாக நடித்து ரசிகர்களின் பாராட்டை பெற்றுவிட்டனர். 'கோடை' நாடகத்தின் சிறப்புக்கும் பாத்திர அமைப்புக்கும் கவிதை கைகொடுத்து உதவியிருக்கிறது.

நாடகத்தில் பொறுப்புள்ள குடும்பப்பெண்ணாக செல்வம் பாத்திரத்தில் நடித்த கௌரி வரதராஜனின் நடிப்பு சிறப்பாக இருந்தது 'பொறுத்தது போதும்' புகழ் அ. பிரான்சீஸ் ஜெனம் சிறந்த நடிகர் என்பதை மாணிக்கம் பாத்திரம் மூலம் துலாபாரமாக ரசிகர்களுக்கு எடுத்துக்காட்டினார். ஏ. ரி. பொன்னுத்துரை ரி. எஸ். லோகநாதன், சுந்தரலிங்கம் மற்றும் சிறுவன் ஆகியோரின் நடிப்பும் நாடகத்தின் சிறப்புக்கு மேலும் மெருகூட்டின.

கண்ணனின் இசை இதமாக இருந்தது. குறிப்பாக நாதஸ்வர ஓசை இனிமையாக அமைந்திருந்தது. உரையாடல்களை மேலும் விரிவுபடுத்தி சிறு திருத்தங்கள் செய்தால் நாடகம் இன்னும் சிறப்பாக அமைந்து இருக்கும். ஒளி அமைப்பு கண்ணுக்கு விருந்தாக இருந்தது. நடிகர்கள் சிலரின் மேக்கப்பில் சற்றுக் கூடுதல்கவனம் செலுத்தியிருக்கலாம். கமலி பாத்திரம் ஏற்று நடித்த செல்வி அ. பிரேமாவதிக்கு அதிகம்பவுடர் பூசியதால் அவரது முகபாவனைகளை ரசிகர்கள் ரசிக்க முடியாமல் போய்விட்டது.

நாடகத்துக்காக கதைகளைத் தேடி அலையாமல் நமது உள்ளூர் எழுத்தாளர்களின் படைப்புக்களைச் சிறந்தநாடகமாக்கிவிடமுடியும் என்பதை இந்நாடகத்தின் மூலம் நிரூபித்துள்ளார்கள்.

—'கலைப்பித்தன்'


**ஸ்ரீதர்** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள் இன்று மட்டும்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
**பொல்லாதவன்**
(ஈஸ்ட்மன் கலர்)


விமலராசா விவகாரம்:

# உழைக்கும் மக்கள் கட்சி செயலாளர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''ஒருவருட காலத்துக்கும் மேலாக விமலராசா எனும் பல்கலைக்கழக மாணவரை நீதியற்ற முறையில் தடுத்து வைத்திருப்பதை உழைக்கும் மக்கள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது வெறும் சந்தேகத்தின் பேரில் ஆட்களை இவ்வாறு நீண்டகாலத்துக்கு மறியலில் வைத்திருப்பது அநாகரிகச் செயலாகும். தற்போதைய யூ.என்.பி. அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் போர்வையில் மக்களை அவதிப்படுத்தவும் சித்திரவதை செய்யவும் அரசயந்திரத்தைப் பயன்படுத்தி வருகின்றது. பயங்கரவாதச் செயல்களுடன் ஒரு தொடர்பு மற்ற நிரபராத வாலிபர்களை பொலிசும் ராணுவமும் அவதிப் படுத்தி அடியுதைக்குட்படுத்தி வருகின்றன

இவ்வாறு உழைக்கும் மக்கள் கட்சியின் பொதுச்செயலாளர் திரு எச். எல். கே. கரவிட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன் விமலராசா தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் மனித உரிமைகட்கு சிறிதும் மதிப்பளிக்காத முறையில் அந்த அரசு நடப்பதாக யு என். பி. ஒலமிட்டு ஆரவாரித்தது. திருமதி. பண்டாரநாயக்கா அவசரகால அதிகாரங்களைத் துர்ப்பிரயோகம் செய்தார் என்பது அவரது குடியியல் உரிமையைப் பறித்ததற்கு ஒரு காரணமாக யூ. என். பி. யால் காட்டப்பட்டது என்றுகூறியுள்ள திரு. கரவிட்ட மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன்றைய அரசாங்கம்என்ன செய்கிறது? முன்னர் அவசரகாலநிலையின்கீழ் மட்டுமே பிரயோகிக்கப்பட்ட சட்டங்களை சட்டப்புத்தகங்களில் சேர்த்துவிட்டு முன்னைய அரசாங்கம் அவசரகாலத்தைப் பிறப்பித்தபிறகே பயன்படுத்திய அதே சட்டங்களை இன்று யூ. என். பி. அரசாங்கம் சாதாரண காலத்திலும் கொடூரமாகப்பயன்படுத்துகிறது இச் சட்டங்கள் தொழிலாளர், மாணவர், வாலிபர்கட்கெதிராகக் கடுமையாக பயன்படுத்தப்படுகின்றன.

ஜனாதிபதி ஜயவர்த்தனா தர்மிஷ்ட பெயர்ப்பலகை ஏந்தி நிற்கிறார். ஆனால் அவரது ஆணைக்குட்பட்ட பாதுகாப்புப் படைகளோ விமலராசா போன்றவர்களை அவர்கள் என்ன குற்றம் சாட்டப் பட்டுள்ளார்கள் என்று கூடச் சொல்லாமல் அவசியமில்லாதளவு நீண்ட நாட்களுக்கு மறியல் வைத்திருக்கின்றன.

இது கள்ளக்கடத்தலுக்கு அகப்பட்ட பெரிய இடத்து மனிதர்கள் நடத்தப்படும் முறையுடன் ஒப்பிடுகையில் அப்பட்டமாகவே பாரபட்சமானது. அவர்களை தங்கள் பதவிகளை விட்டு விலகும்படி மட்டுமே சொல்லப்படுகிறார்கள். சட்டம் அவர்களைப் பிணையில் செல்லவும் அவர்கள்மீது விதிக்கப்பட்ட அபராதங்களுக்கெதிராக மேன்முறையீடு செய்யவும் அனுமதிக்கிறது.


**மனோகரா** (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
3-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
★ கார்த்திக் ★ ராதா
தியாகராஜன் நடித்த
**அலைகள் ஓய்வதில்லை**
(கலர்)

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4காட்சிகள்
தொடர்ந்து ''ஹவுஸ்புல்'' காட்சிகளாக
★ ரஜனிகாந் ★ சுஜாதா ★ விஜயன்
★ கராத்தே மணி ★ ரதி
**அன்புக்கு நான் அடிமை**
[ஈஸ்மன் கலர்]

**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
2-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
சுவப்னா, தேங்காய்,
தங்கவேலு, நாகேஷ்.
இப்பொழுது பரபரப்பூட்டிக் காட்சியளிக்கிறது.
**கடல் மீன்கள்**
விறுவிறுப்பு மிகு வண்ணத் திரை ஓவியம்

2 ஆண்டுகளாகக் கிடைக்காத

# மேலதிக நேர ஊதியத்தை தாதிமாருக்கு வழங்க உறுதி

(யாழ்ப்பாணம்)

இரண்டு ஆண்டுகளாக மேலதிக நேர வேலைக்கான ஊதியம் வழங்கப்படாதிருந்த யாழ் ஆஸ்பத்திரி தாதிமாருக்கு இம் மாத இறுதிக்குள் இவ்வேதனம் வழங்கப்பட இருக்கிறது.

யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிபர் டாக்டர் செ. நச்சினார்க்கினியர் தம்மைச் சந்தித்த தாதிகள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் இதற்கான உறுதி மொழியைத் தெரிவித்தார்.

அரசாங்க பொது தாதிய உத்தியோகத்தர் சங்க தலைவர் திரு. நா மயில்வாகனம், செயலாளர் திரு. ரி கதிர்காமதாஸ் உட்பட சங்கப் பிரதிநிதிகள் டாக்டர் நச்சினார்க்கினியரைச் சந்தித்துபேச்சுநடத்தினார்கள்.

பெண் தாதிய விடுதி புனரமைக்கப்படும்போது சிரமதானம் மூலம் தாங்கள் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஆண் தாதியருக்கு ஒரு ஓய்வறை வழங்கப்படும் என்றும் வைத்தியசாலை அதிபர் உறுதி அளித்தார். (மா-இ)

யாழ்ப்பாணத்திலிருந்து நாடு முழுவதுக்கும்

# இவ்வாண்டு முடிவுக்குள் நேரடி தொலைபேசி தொடர்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து இவ்வாண்டு முடிவுக்குள் இலங்கையின் சகல பகுதிகளுக்கும் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியும்.

## 'குளோபல்' கிளை திறப்பு விழாவில் யாழ். மாவட்ட அமைச்சர் தகவல்

இவ்வேளையில் ''குளோபல்'' தொடர்பு நிறுவனமும் யாழ். மக்களுக்கு சிறந்த தொலைத் தொடர்பு சேவை ஒன்றை அளிக்கமுன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு.பி. விஜயக்கோன் தெரிவித்தார்.

'குளோபல்' தொடர்பு நிறுவனத்தின யாழ். கிளை நேற்று யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பன்முக பணிமனையில் திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி கிளை ஸ்தாபன ஆளும் இயக்குநர் திரு. மு. சண்முகராசா தலைமையில் வைபவம் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோனும், மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசாவும், குத்துவிளக்கேற்றி இக்கிளையைத் திறந்து வைத்தனர்.

யாழ். அபிவிருத்திசபைத் தலைவரும் மாவட்ட அமைச்சரும் இத்தொலைத்தொடர்பு சேவையை ஆரம்பித்துவைத்தனர்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம், மற்றும் யாழ். தபால் தந்தித் திணைக்கள அதிகாரிகளும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

**'நடா உரை'**

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு நடராசா பேசுகையில் கூறியதாவது;

கைத்தொழில் வளர்முக நாடுகளில் தகவல் பரிமாற்றங்களை தனியார் நிறுவனங்கள் கைக்கொள்ளுகின்றன. அந்த வகையில் குளோபல் நிறுவனம் இலங்கையில் நல்ல பணி ஆற்றி வருகிறது. இவர்கள் யாழ்ப்பாணத்தில் தமது கிளையை நிறுவுவது யாழ்ப்பாணமக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். [மா-இ]

# மாணவிக்கு தொந்தரவு? இளைஞருக்கு றிமாண்ட்

(யாழ்ப்பாணம்

யாழ். தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் படிக்கும் மாணவிக்குத் தொந்தரவு கொடுத்து வந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

தனியார் கல்வி நிலையத்தில் பயிலும் மாணவி ஒருவர் தனது சிநேகிதியுடன் சைக்கிளில் சென்று வருகையில் இளைஞர் ஒருவர் தமது சிநேகிதனுடன் சைக்கிளில் சென்று பல நாட்களாகத் தொந்தரவு கொடுத்து வந்தாரென்றும், அண்மையில் ஒருநாள் கடிதம் ஒன்று கொடுக்கமுயற்சித்ததாகவும் மாணவி அக்கடிதத்தை வாங்க மறுத்தபொழுது அந்த இளைஞர் 'உன்னைக் கடத்திச் செல்வோம் என்றும், வீட்டை எரிப்போம்' என்றும் மிரட்டியதாகவும் பொலிஸாரிடம் அந்த மாணவி புகார் செய்திருந்தார்.

யாழ். பொலிஸார் சந்தேகத்தின்பேரில் இளைஞரைக் கைதுசெய்து யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது இம்மாதம் 16ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். [மா-இ]

## யாழ். சிறையில் பாசன்

(யாழ்ப்பாணம்)

யாழ், சிறைச்சாலையில் இம் மாதம் 6 ம் திகதி பொசன்பண்டிகை கொண்டாடப்படவிருக்கிறது.

யாழ். நாகவிகாரைபௌத்த மதகுரு மதவழிபாடு நடத்துவார்.

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் திரு. எஸ். சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பிரதான ஜெயிலர் திரு ரி எச். அமூன், நலன்புரி உத்தியோகத்தர் ஸ்ரீதரன் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்

யாழ். சிறைச்சாலையில் சகல மத வைபவங்களும் கொண்டாடப்பட்டு வருவது தெரிந்ததே [மா]

சர்வதேசப் பிரச்னைகள்

# சமாதான வழிகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும்!

## பௌத்த மகாநாட்டில் ஆலோசனை

[கொழும்பு]

''சர்வதேசப் பிரச்னைகள் சமாதான வழிகளின் மூலம் தீர்த்துவைக்கப்பட வேண்டும். இதற்காக புத்தபெருமானின் நற்போதனைகளைப் பின்பற்ற வேண்டும்''

மேற்கண்ட தீர்மானமொன்றை நிறைவேற்றுவது பற்றி இலங்கையில் நடைபெற்றுவரும் உலக பௌத்த மாநாட்டில் நேற்று ஆராயப்பட்டது.

இம்மாநாட்டில் இந்தியா, பங்களாதேஷ். இந்தோனேஷியா, ஹொங்ஹொங் ஆகிய நாடுகளிலிருந்தும்பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். [வெ]

யாழ். நூலக புனரமைப்பு:

# லண்டன் தமிழ் இளைஞர் 600 பவுண் அன்பளிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலக மீளமைப்பு நிதிக்கு லண்டனிலிருந்து மோகன் யோகேந்திரன் என்பவர் 600 பவுணை (சுமார் 24,000 ரூபா) அனுப்பி வைத்துள்ளார்.

இவர் நூலக நிதிக்காக லண்டனில் இசைநாடகம் நடாத்தி இந்நிதியைச் சேர்த்தாராம்.

## டாக்ஸிகளை பொலிசார் அகற்றினர்

(யாழ்ப்பாணம்

யாழ். ரயில்நிலையத்தில் வழமையாக நிறுத்தப்படும் டாக்ஸியின் சாரதிஒருவருக்கு ரயில் நிலைய ஊழியர் ஒருவருக்கும் இடையே வாகனத்தரிப்பு கட்டணம் தொடர்பாக ஏற்பட்ட வாக்கு வாதத்தை அடுத்து சில டாக்ஸிகள் ரயில் நிலைய வீதியில் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் சிறிது நேரத்தில் பொலிசார் அந்த டாக்ஸிகளை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். (மா-இ)


## வெற்றிடங்கள்

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பபுளர் (Bubblers), ஹெல்ப்பர் (Helpers, புளோவர் (Blowers) போன்றவர்கள் தேவை.

அனுபவமுள்ள Bottle and Press Mechine இயக்குநரும், ஹெல்பரும் தேவை.

நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.

உடனே நேரில் வரவும்.

**சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்**

**நீர்வேலி.**

3406


## மரண அறிவித்தல்

### சின்னத்துரை இராசரத்தினம்

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்தவரும் வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலையின் இளைப்பாறிய ஆசிரியருமான சின்னத்துரை இராசரத்தினம் (இராசு வாத்தியார்) காலமானார். இவர் காலஞ்சென்ற புறக்டர் கந்தசாமி, நாகரத்தினம், திருமதி சு. சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரது ஈமைக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (3-6-82) வட்டுக்கோட்டையில் நடைபெறும். 34 3

## ஹிமாச்சாலய அமைச்சரவை

புதுடில்லி, ஜூன் 2

ஹிமாச்சாலய பிரதேசத்தில் 15 பேரைக் கொண்ட அமைச்சரவை இன்று பதவியேற்றதாக அறிவிக்கப்பட்டது. [வெ]


# ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு

தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு

கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 370—438—537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல; 273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


## சர்வகட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் தலைவர் திரு. பி. தங்கபாலு கலந்துகொண்டமைக்கு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளரும், ஏனைய மூன்று உறுப்பினர்களும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

திரு. தங்கபாலு அண்மையில் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தியை புதுடில்லியில் சந்தித்து, தமிழகத்தில் கைதான இலங்கையைச் சேர்ந்த ஐந்து தீவிரவாத தமிழ் இளைஞர்களையும் இலங்கை அரசிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டாமென்று கேட்டிருந்தது தெரிந்ததே. [வெ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூன் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81.
elanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126